# குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்

## செயல்படுத்தும் நிறுவனம்

மாநில அளவில் தொழில் வணிகத்துறை ஆணையரகமும், சென்னை மாவட்டத்திற்கு மண்டல இணை இயக்குநர் சென்னை அவர்களும் மற்றும் இதர மாவட்டங்களுக்கு பொது மேலாளர்கள் மாவட்ட தொழில் மையமும் செயல்படுத்தும் நிறுவனங்கள் ஆகும்.

## தொடங்கப்பட்ட ஆண்டு

2021-22

## பின்னணி

இந்தியக் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தலைமையகமாகத் திகழும் 23.60 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் இந்திய அளவில் முதன்மையான இடத்தினை வகிப்பதுடன் தமிழகம் தோல் மற்றும் அதை சார்ந்த பொருட்கள்,பொறியியல் பொருட்கள், வார்ப்புப் பொருட்கள், பம்புகள் மற்றும் ஆடை உற்பத்தி தொழில்கள் போன்ற பல துறைகளில் தலைமைத்துவம் வகிக்கிறது. இந்நிலையில் திறன் மேம்படுத்தப்பட்ட மனித வளத்தைப் பெறுவது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் முக்கிய சவாலாக உள்ளது.

நோக்கம்:

இத்திட்டத்தின் நோக்கமானது குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிலேயே திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான வாய்ப்பை ஏற்படுத்தி குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான திறன்மிகு மனித ஆற்றலை உருவாக்கி, அத்தொழில் நிறுவனங்களிலேயே வேலைவாய்பை அளித்தல் ஆகும். இத்திட்டத்தின் மூலம் பயிற்சி அளிப்பதற்கான செலவினங்களில் ஒரு பகுதியை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அரசு வழங்கும்.

பயிற்சி பெறுதற்கான தகுதிகள்:

விண்ணப்பதாரர்கள் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகங்கள் / தேசிய திறன் மேம்பாட்டு முகவர்கள் மற்றும் அதைப்போன்ற நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தேவையான கல்வி தகுதி மற்றும் வயது வரம்பை பூர்த்தி செய்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் கடந்த மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பொறியியல் பட்டம் அல்லது பட்டயம் அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தில் படித்த 18-45 வயதிற்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

பயிற்சி வழங்குவோர்:

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் திறன் பயிற்சி சான்றிதழ்களுடன் கூடிய வேலைவாய்ப்பினை வழங்கும். குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பயிற்சி அளிப்பதற்குத் தேவையான தகுதிகள் பயிற்சியாளர்களுக்கு இருத்தலை உறுதி செய்ய வேண்டும்.

நிதி உதவி:

இத்திட்டத்தின்படி குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தேவையான திறன் பயிற்சியினை தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு 6 மாத காலத்திற்கு வழங்கும் இக்காலத்தில் குறைந்தபட்ச ஊதியமாக மாதத்திற்கு ரூ.5000/- வீதம் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களால் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கப்படும். அத்தொழில் பயிற்சி காலத்திற்கு அரசு மாதாந்திரமாக ரூ.2000/- வீதம் 6 மாத காலத்திற்கு பயிற்சி ஊக்கத்தொகையை அளிக்கும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பயனாளிகளுக்கு பயிற்சி பெற்றோரின் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.